13.11.2025

OS No: 187/2021

பி.வா.சா.1 திரு. கருத்தசாமி த/பெ.முத்து

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கின் வாதி என்னுடைய இரண்டாவது மகன் என்றால் சரிதான். வழக்கின் 2ம் பிரதிவாதி என்னுடைய மூத்த மகன் என்றால் சரிதான். தாவா வழக்கின் சொத்தானது என்ன சர்வே எண் கொண்டது என்றால் சர்வே எண் தெரியாது நான் வாங்கிய சொத்துதான். மேற்படி சொத்தை நான் நீலா என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். எத்தனை செண்ட் நிலத்தை கிரையம் வாங்கினேன் என்றால் 88 செண்ட் இருக்கும் என நினைக்கிறேன். வாதி 2006 ஆம் வருடத்திலேயே வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று விட்டார் என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி 2009 ஆம் வருடம் ஒரு பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். காதலித்து திருமணம் செய்த காரணத்தால் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2. இரண்டாவது பிரதிவாதி போலீசார் இடமிருந்து பிடிபடாமல் இருக்க தலைமறைவாக சில நாட்கள் இருந்தார் என்றால் சரியல்ல.இரண்டாம் பிரதிவாதியை போலீசார் இடமிருந்து காப்பாற்றுவதற்கு வாதி தான் உதவி செய்தார் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி தான் தலைமறைவாக இருந்தார் என்றும் வாதி தான் அவரை காப்பாற்றினார் என்றும் சொன்னால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி பக்கத்து ஊரில் தனிக்குடித்தனமாக இருந்தால் என்றால் சரியல்ல ஊரில் தான் தனிக்குடித்தனமாக இருந்தார். வாதி தான் என்னை பராமரித்து பாதுகாத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு திருமண செலவுகள் அனைத்தையும் செய்து வாதி தான் உதவியாக இருந்தார் என்றால் சரியல்ல நான் தான் அனைத்து செலவுகளையும் செய்து திருமணத்தை நடத்தி வைத்தேன் வாதி எனக்கு உதவியாக இருந்தார் என்றால் உதவியாக இருந்தார். வாதி தான் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை வைத்து எனது

மகளுக்கு திருமணம் செய்ய உதவியாக இருந்தார் என்றும் அதை மறைத்து இல்லை என சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தை நான் கிரயம் பெற வாதி தான் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை எனக்கு அனுப்பி உதவி செய்தார் என்றால் சரியல்ல. கிரையப்பணத்தை நீலாவிடம் வாதி தான் கொடுத்தார் என்றால் சரியல்ல செல்வராஜன் என்பவர் கொடுத்தார். நீலாவை கேட்டால் யார் கிரைய பணத்தை கொடுத்தார்கள் என்ற உண்மை தெரியவரும் என்றால் சரிதான், அவரை நான் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. வாதி மனைவி பெயரில் அரசாங்கத்தால் மாடு ஒன்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மாட்டை இரண்டாம் பிரதிவாதி ஆரம்பத்தில் வைத்திருந்தார் என்றால் சரிதான் அதன் பிறகு அவரும் அதனை அனுப்பி விட்டார். வாதி தான் என்னை பார்த்து வந்தார் என்றும் 2ம் பிரதிவாதி தனிக்குடித்தனமாக சென்றுவிட்டதால் என்னை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2010 ஆம் வருடம் நான் கிரையம் பெற்ற சொத்தை வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல அது போன்ற தான செட்டில்மெண்ட் பத்திரம் உள்ளதா என்றால் தெரியவில்லை. வாதி பெயருக்கு அவர் வெளிநாட்டிலிருந்து வந்தவுடன் 10.11.2010 ஆம் வருடம் நான் கிரயம் பெற்ற சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டேன் என்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு நான் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை 2010 வருடம் எழுதி கொடுத்து அதில் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை அது குறித்து மறுத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் எழுதிப் கொடுத்த பிறகு மேற்படி சொத்தை பொருத்து இரண்டாம் பிரதிவாதிக்கு மீண்டும் உரிமை மாற்றம் செய்திட எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 2016 ஆம் வருடம் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்வதற்கு பத்திரம் ஏதேனும் போட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை வாதிக்கு நான் எழுதி கொடுத்து விட்டேன் என்றும்

அதனால் தாவா சொத்தை இன்று வரை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த பிறகு மேற்படி தானத்தை நான் ரத்து செய்து எந்த பத்திரமும் ஏற்படுத்தவில்லை என்றும் இரண்டாம் பிரதிவாதி தான் ரத்து பத்திரத்தையும் அவர் பெயரில் நான் தாவா சொத்தை பொறுத்து பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்ததாக ஒரு பத்திரத்தையும் மோசடியாக ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியில்ல. 2ம் பிரதிவாதி மோசடியாக பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டதால் தாவா சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 2010ம் வருடம் வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் எழுதிக் கொடுத்து உள்ள காரணத்தால் மேற்படி சொத்தை பொறுத்து தடை இடையூறு செய்திட எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.13 17:30:18 +0530